செய்தி வெளியீட்டு எண்.949 நாள்: **8.12.2009**

## கூவம் ஆற்றுச் சீரமைப்புப் பணிகள்
## மாண்புமிகு துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆய்வு

கூவம் ஆற்றுச் சீரமைப்புப் பணிகளை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (8.12.2009) சென்னை, சிந்தாதிரிப் பேட்டை கூவம் ஆற்றங்கரையில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருதை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இவ்வாய்வின் போது செய்தியாளர்களிடம் பேசிய துணை முதலமைச்சர் அவர்கள் ‘‘கூவம் ஆற்றினை சீரமைக்க வேண்டும் என்பது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் கனவுத் திட்டமாகும். கூவம் ஆற்றினை சீரமைக்கும் பணியினை நிறைவேற்ற நீண்ட காலமாக திட்டமிடப்பட்டு வருகிறது. இதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் என்னுடைய தலைமையில் ஒரு ஆணையத்தினை அமைத்துள்ளார். இதன் முதற்கட்டமாக, ஆக்கிரமிப்புகளை அகற்றி பொதுப்பணித்துறையின் வசம் உள்ள இடங்களை மாநகராட்சி மூலம் சீரமைத்து இப்போது இந்த சிந்தாதிரிப்பேட்டை கூவம் ஆற்றங்கரையை சோலைவனமாக மாற்றும் பணி தொடங்கப்பட்டுள்ளது. குறிப்பிட்டு சொல்ல வேண்டுமானால், சிங்கப்பூரில் 12 கிலோ மீட்டர் நீளமுள்ள நதியினை 10 ஆண்டுகாலமாக புனரமைத்து அழகுபடுத்தி உள்ளனர். இதனை பார்வையிட்டு வருமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் எங்களை பணித்தார். அதற்கேற்றவாறு நானும், அரசு உயர் அலுவலர்களும் பார்வையிட்டு வந்துள்ளோம். சென்னையில் கூவம் நதியின் நீளம் 18 கிலோ மீட்டர். திருவள்ளூவர் மாவட்டத்தில் கூவம் நதியின் நீளம் 54 கிலோ மீட்டர், மொத்தம் 72 கிலோ மீட்டர் தூரம் வருகிறது. கூவம் ஆற்றினை தூய்மைப்படுத்தும் பணியினை முதல்வர் கலைஞர் அவர்கள் மிக விரைவில் செயல்படுத்த வேண்டும் என்று கட்டளையிட்டுள்ளார். கூவம் ஆற்றில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, அவர்களுக்கு உரிய மாற்று இடங்கள் வழங்கப்படும். கூவம் ஆற்றை சீரமைக்கும் பணியில் இதுவரை சுமார் 10000 ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளது. கூவம் சீரமைப்புப் பணியினை மேற்கொள்ள நதிநீர் ஆணையம் மட்டும் இல்லாமல், தலைமைச் செயலாளர் தலைமையில் நிர்வாக குழுவும் அமைக்கப்படவுள்ளது. இப்பணியில் அரசின் பல்வேறு துறைகள் இணைந்து செயல்பட இருக்கின்றது. சிங்கப்பூர் நதியை தூய்மைப்படுத்த 10 ஆண்டு காலம் ஆகியுள்ளது. சென்னை கூவம் நதியினை 10 ஆண்டுக்களுக்குள்ளாக சிங்கப்பூர் நதியை விட சிறப்பாக சீரமைத்து அழகுப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது

என்று துணை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

**<u>கூவம் ஆற்றின் சீரமைப்பதற்கு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள்</u>**

**<u>கடந்த கால முயற்சிகள் :–</u>**

1967ஆம் ஆண்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டின் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தபொழுது படகு குழாம் அமைத்தல், கரைகளுக்கு சிமெண்ட் தளம் அமைத்தல், நீர் வழிகளில் தடுப்பு கதவு ஏற்படுத்துதல் போன்ற பல சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 1997 ஆம் ஆண்டு முதல் தேசிய நதிநீர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ், 1200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை மாநகர நீர்வழி பாதைகள் மேம்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இதில் சுமார் 400 கோடி ரூபாய் அளவிற்கு சென்னை குடிநீர் வடிகால் வாரியத்திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டன. எனினும், கூவம் ஆற்றின் பெரும் பகுதி இடம் பெற்றுள்ள திருவள்ளூர் மாவட்ட பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படாததால், முழுமையான பயன் கிடைக்கவில்லை.

**<u>கூவம் ஆற்றுச் சீரமைப்பிற்காக தற்போதய திட்டம் :–</u>**

சிங்கப்பூரில் உள்ள சிங்கப்பூர் ஆறு, கல்லாங் ஆறு ஆகியவை எவ்வாறு சீரமைக்கப்பட்டுள்ளது என்பதை கண்டறிய மாண்புமிகு துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், தொழிற்துறை முதன்மை செயலாளர் திரு.எப்.எம்.பரூக்கி, பொதுப்பணித்துறை முதன்மைச் செயலாளர் திரு. இராமசுந்தரம், துணை முதலமைச்சரின் முதன்மைச் செயலளார் திரு.கே.தீனபந்து, திரு.பனீந்திரரெட்டி, திரு.காந்திமதிநாதன் ஆகியோர் அடங்கிய குழு நவம்பர் 23 முதல் 27 வரை சிங்கப்பூருக்கு பயணம் மேற்கொண்டது.

சிங்கப்பூர் ஆறு, கல்லாங் ஆறு ஆகியன 1977 முதல் 1987 வரையிலான 10 ஆண்டு காலத்தில் சீரமைக்கப்பட்டுள்ளது. இப்பணியின் போது ஆக்கிரமிப்புகள் அகற்றம், சிறுகடைகள், வியாபாரிகள், தொழிற்சாலைகள் அகற்றம், பன்றி, வாத்து பண்ணைகள் அகற்றம், நதி சிரமைப்பிற்கென தனி அமைப்பு, பொது மக்கள் பயன்படுத்தும் வகையில் நதிப்பகுதியை மாற்றியமைத்தல், கழிவுநீர், திடக்கழிவுகள் கலப்பதை தடுத்தல், நீரின் தரம் உயர்த்துதல் ஆகிய பணிகளை இக்குழு பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தலைமையில் சிங்கப்பூர் சென்று திரும்பி இக்குழு தனது அறிக்கையினை 01/12/2009 அன்று மாண்புமிகு தமிழக முதல்வரிடம் சமர்ப்பித்தது. இதனை தொடர்ந்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், சென்னை நதிநீர் ஆணையம் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தலைமையில்

அமைக்கப்படுவதாக அறித்தார்கள். இதற்கான அரசாணை விரைவில் வெளியிடப்பட்டு, இந்த அமைப்பு சட்ட ரீதியான அமைப்பாக உருவாக்கப்படும்.

கூவம் ஆற்றினை சீரமைக்கும் பணியின் போது, கூவம் ஆற்றின் கரைகளிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அகற்றப்படும் ஆக்கிரமிப்புகளை பொறுத்து தகுந்த இனங்களில் விதிமுறைப்படி, உரிய மாற்று ஏற்பாடுகள் செய்யப்படும். கூவம் நதிக்கரையில் இனி வரும் காலங்களில் ஆக்கிரமிப்பு ஏற்படாதவகையில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு ஏற்றவகையில் திட்டங்கள் செயல்படுத்தப்படும். கழிவு நீர், திடக்கழிவு கூவம் ஆற்றில் சேராதவகையில், தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ஆற்றிலுள்ள சகதியை வெளியேற்றி கரையை பலப்படுத்தும் பணிகள் நிறைவேற்றப்படும். பொதுமக்கள் பயன்பெறும் வகையில், ஆற்றின் கரை பகுதிகள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். அதனடிப்படையில் சென்னை மாநகராட்சியால் காந்தி இர்வின் சாலையில் அமைக்கப்படவுள்ள பூங்கா மற்றும் நடைபாதை பணிகளை மாண்புமிகு துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் இன்று (8.12.2009) தொடங்கிவைக்கப்பட்டது.

கூவம் ஆறு தனது அதிகமான நீர்வரத்தினை திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் ஏரிகளிலிருந்து பெருவதால், இத்தகைய 71 ஏரிகளை மேம்படுத்தி ஆற்றின் நீர்வரத்தை அதிகரிக்க வகை செய்யப்படும். துறைமுக பகுதியில் மணல் திட்டை அகற்றி, கழிமுக பகுதி சீரமைக்கப்படும். முதற்கட்டமாக உள்ளாட்சி பகுதிகளில் சுமார் 200 கோடி மதிப்பீட்டில் புதிதாக பாதாள சாக்கடை திட்ட பணிகளை செயல்படுத்துதல், ஏற்கனவே உள்ள பாதாள சாக்கடை திட்டங்களை 117 கோடி ரூபாயில் மேம்படுத்துதல், ஆற்றின் கரை பகுதிகளை 200 கோடி ரூபாயில் மேம்படுத்துதல் ஆகிய திட்டங்கள் மேற்கொள்ளப்படும். பொதுப்பணித்துறையின் நீர்வள நிலவள திட்டம், நகராட்சி நிர்வாகத்தின் ஜவஉறர்லால் நேரு நகர்புற புணரமைப்பு திட்டத்தின் கீழ் சில பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்படும். இதர பணிகளுக்கு தேவையான நிதி ஆதாரங்கள் இறுதி செய்யப்பட்டு பணிகள் செயல்படுத்தப்படும். முதற்கட்ட பணிகளுக்காக ரூபாய் 1200 கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. சென்னையில் உள்ள நீர்வழிப்பகுதிகளில் முதலில் கூவம் ஆற்றை சீரமைக்கவும், இதனைத்தொடர்ந்து சென்னையிலுள்ள பிற ஆறுகளை சீரமைப்பது குறித்தும் பரிசீலிக்கப்படும்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.